

தீப்பந்தம்
குறுங்கவிதைகள்
கா.பாலபாரதி

# தீப்பந்தம்


## கா.பாலபாரதி

**மின்னூல் வெளியீடு : http://FreeTamilEbooks.com**

தீப்பந்தம்

பதிப்புரிமை ©

இவரால் / இதனால் கா.பாலபாரதி




**தீப்பந்தம்**

கா.பாலபாரதி

உரிமை - Creative Commons Attribution-NonCommercial-NoDerivatives 4.0

உரிமை - கிரியேட்டிவ் காமன்ஸ். எல்லாரும் படிக்கலாம், பகிரலாம்.

மின்னூலாக்கம் - மேலட்டை உருவாக்கம் - லெனின் குருசாமி - gurulenin@gmail.com

புத்தகம் உருவாக்க பயன்படுத்தப்பட்ட
கட்டற்ற மென்பொருட்கள்

குனு/லினக்சு, லிப்ரே ஆபிஸ், ஜிம்ப், இன்சுகேப்

## உங்களுடன் ஒரு நிமிடம்...

மின்னூல் வாசகர்கள் அனைவருக்கும், உள்ளம் நெகிழ்ந்த வணக்கங்கள்! இந்த மின்னூல் முழுவதும், ஓரிரு வரிகளில் அமைந்த நுண்பதிவுகள், கவி நயத்தோடு நிரப்பப்பட்டுள்ளது. குறும் செய்திகளாகவும், வண்ணப் படங்களின் மேல் எழுதப்பட்ட வாசகங்களாகவும், பயணம் செய்த எனது சிந்தனைகளை, நண்பர்கள் கேட்டுக் கொண்டதன் விளைவாக, மின்னூலாக வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இதற்கு முன், இத்தளத்தின் வழியாக வெளியான எனது இரண்டு கவிதை நூல்களால், வெளியிலிருந்து பல்வேறு வாய்ப்புகள் வந்து, என் வளர்ச்சியைத் தூண்டிய வண்ணம் உள்ளது. அதற்காக, இலவசத் தமிழ் மின்னூல் தளக் குழுவினர் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் சேவையோடு என்னையும் அர்ப்பணித்துக்கொள்கிறேன்.

இனி நான் பேசுவதைவிட, இந்த மின்னூல் உங்களிடம் பேசட்டும். நன்றி!

1

எவரையும் புறம் பேசாதே!

நீ பேசும் அதே நேரத்தில்,

உன்னைப் பற்றியும்

யாரேனும் புறம் பேசலாம்!

2

முயற்சிப்போம்!

நம்மால் முடிந்த வரை அல்ல,

நாம் நினைத்தது முடியும் வரை!

3

நம் உதவி,

ஒருவரை ஊக்கப்படுத்த வேண்டுமே தவிர

சோம்பேறி ஆக்கிவிடக் கூடாது!

ஒரு வேளை உணவை பிச்சையிடுவதை விட

ஒரு வேலையை பரிசளித்துப் பாருங்கள்!

4

உள்ளத்தில் அழுக்கும்

உடலில் அழகும் இருப்பது

உள்ளே அழுகிய பழம்போல்

வேளையைபயனற்றுப்போகும்!

5

உணர்ச்சியைத் தன் வசப்படுத்தத் தெரிந்தவன்

உணர்ச்சியின் வசப்படமாட்டான்.

6

ஒரே வெட்டில் மரத்தைச் சாய்க்கலாம்!

ஆனால், அதை ஒருநாளில் வளர்த்தெடுக்க முடியாது!

7

சாதனை சாதாரண நிலத்தில் வளரும் செடி அல்ல!

சோதனையை எரித்து

சாம்பலை உரமாக்கிக்கொண்டு

வளர்க்கப்பட வேண்டிய மரம்!

8

நாம் சம்பாதிக்க நினைப்பது “பணத்தை”

நாம் சம்பாதிக்க வேண்டியது பிறர் “மனதை”

9

பொருளை மட்டுமே

தேடி அலையும் வாழ்க்கை,

பொருளற்றே போய்விடும்!

10

ஏழ்மை செல்வ இருப்பில் இருக்கலாம்.

நம் உள்ளத்தில் இருத்தல் ஆகாது!

11

புதுமை பழமைக்கு வண்ணமாகலாம்

அதன் அழிவுக்கு வழியாகிவிடக் கூடாது!

12

கோபம்,

கொண்டவனைக் கொன்ற பிறகே

பிறரைக் கொல்லும்!

13

பகையுணர்வு உன்னை மறந்து

பகவனைப் பற்றியே சிந்திக்க வைக்கும்!

14

சொல்லே செயலாகவும்

செயலே சொல்லாகவும் இருக்க

வாழ்வு தானே சிறக்கும்!

15

நம்பிக்கையை நாம் கைக்கொண்டால்

வெற்றி நம்மைக் கைக்கொள்ளும்!

16

தோல்வியின் காரணங்களை

மறவாமல் இருந்தால்

வெற்றியின் சூத்திரங்கள்

தானாகப் புரியும்!

17

நீ திறமையைக் காட்டினால்,

திறமை உன்னை

உலகத்திற்குக் காட்டும்!

18

இயலாமை உடலில் இருக்கலாம்

உள்ளத்தில் இருந்துவிடக் கூடாது!

19

ஒருமுறை தான் தப்பு செய்தேன் என்பது

ஒரு குடத்துப் பாலில்

ஒரு துளி கடும் விசம் விழுவதைப்போல்!

எல்லாம் கெட்டுவிடும்!

20

ஓடி, ஓடி, உதவி செய்பவனை

ஊதாரி என்பார்கள்.

உள்ளத்தில்

ஊனம் கொண்டவர்கள்.

21

சிலர் ஏமாற்றுவது தெரிந்தும்,

நான் ஏற்றுக்கொண்டேன்!

அது தெரியாமல்

ஏமார்ந்து கொண்டிருக்கிறார்கள்!

22

மனிதன் வாழ நினைக்கலாம்!

தான் வாழப் பிறர் வாழ்வை

உணவாக்க நினைத்தல் கூடாது!

23

தன்னம்பிக்கைக்குத் தோல்வி இல்லை!

தோல்வி வருமானால்,

அங்குத் தன்னம்பிக்கை இருந்திருக்க

வாய்ப்பில்லை!

24

முயற்சியும் பயிற்சியும்

முளைக்கின்ற செடிபோல

ஒருநாள் நிச்சயம் மரமாகும்!

25

மனிதன் தன் தப்புகளை மறந்துவிட்டு

பிறர் தவறுகளுக்கு

விமர்சகன் ஆகின்றான்!

26

மனிதன் ஒரு சிறந்த நடிகன்

நடிக்கத் தெரியாதவன் போல்

சிறப்பாய் நடிப்பான்!

27

உள்ளதைச் சொல்வது “உண்மை”

உள்ளதை தவிர்த்து

ஊர்க்கதைச் சொன்னால் “பொய்”

28

மனிதன் ஒரு முகமூடிப் பிரியன்!

வாழ்க்கை முழுவதும்

முகத்தை மூடிக்கொண்டு,

முகமூடிகளிலேயே வாழ்கின்றான்!

29

சுதந்திரம்

தனியொருவர் பெற்றுத் தந்ததல்ல!

சுதந்திரம் என்னும் மரத்தின் கீழ்

ஒரு கோடிப் பேர் உரமாகியுள்ளனர்!

30

சகிப்புத்தன்மை!

உண்மையான உன்னை அழித்து,

பொய்யான உன்னை

உண்மையாய்க் காட்டும்!

31

நினைப்பது ஒன்று
நடப்பது ஒன்று என்றால்
நீ சரியாக நினைக்கவில்லை
என்று அர்த்தம்!

32

தன்னை நம்பியவன்
தோற்றுப் போவதில்லை
தனக்குத் தானே
துரோகம் செய்தால் அன்றி!

33

உனக்கு நீ உண்மையாய் இருந்தால்

பிறருக்கும் நீ உண்மையாகும்

பாக்கியம் தன்னால் கிடைக்கும்!

34

நீ நல்லவனாக நடிக்கவும் வேண்டாம்

கெட்டவனாகக் காட்டிக்கொள்ளவும் வேண்டாம்

மனிதனாக வாழ்ந்தால் போதும்!

35

கலாம் போல் காமராஜர் போல் தெரசா போல்

வாழவேண்டும் என்று சொல்லிக்
கொண்டிருப்பதைவிட

நாளைய சமுதாயம் உன்போல் வாழவேண்டும்
என்று

சொல்லும்படியாக வாழ்ந்துகாட்டு!

அந்த வாழ்வில் அவர்கள் மீண்டும் உயிர்
பெருவர்!

36

ஒரு சின்ன ஊக்கம்

ஒருவனை ஒருபடி

உயர்த்திப் பிடிக்கும்!

37

ஊக்குவிப்பவன் கடவுளுக்குச் சமம்

உயர்பவன் கடவுளாவதற்குச் சமம்!

38

நிறையை முன் சொல்லி,

குறையைப் பின் சொல்!

அப்போது தான் நிறையால் மகிழ்ந்த உள்ளம்,

குறையை மறவாமல் நில்லும்!

39

தவறே செய்யாதவன் மனிதன் அல்ல

வாய்ப்புக் கிடைத்தும்

தவறு செய்யாதவனே மனிதன்!

40

உண்மையைப் பொய்யால் போர்த்தினாலும்

உண்மை உறங்கிவிடாது!

41

ஒருவரின் உணர்வை அவமதிப்பது

ஒரு மனிதனைக் கொலை

செய்வதற்குச் சமம்!

42

நிலையற்ற வாழ்வெனத் தெரிந்தும் கூட,

மனிதன் நிலைக்கப்

பொய் பலச் சொல்கிறான்!

43

தவறை ஒத்துக்கொள்பவன்

தாழ்ந்துபோவதில்லை!

44

எல்லோருக்குமே அடையாளம் இருக்கலாம்.

அது எப்படிப் பட்டது என்பதில் தான்

பெருமை உள்ளது!

45

எவரையும் இழிவாய் பேசிவிடாதே.

பிறரால் நீ இழிவுபட

வெகு காலம் ஆகிவிடாது!

46

மனிதனின் உயர்ந்த தேவை மகிழ்ச்சி!

அது பிறர் துன்பத்திலிருந்து

பிறந்துவிடக்கூடாது!

47

கையில் காசுள்ளதே என்று குதித்தால்,

காசில்லாத போது

கால் இல்லாதவனாய் தவிப்பாய்!

48

தனிமை தத்துவத்தின் வாசல்!

49

தனிமையில் இருக்கும் போது

என்ன செய்கிறாயோ

அதுவே நீ!

50

பகையை வளர்த்து ஒதுங்காதே,

இறந்த பின்பு உறவு கிடைக்காது!

51

தன் தவறை தனக்குத் தானே பேசி,

சரியென்று சமாதானம் அடைபவன்,

ஒரு திருத்தமுடியாத குற்றவாளி!

52

தனக்கு வேண்டியவர்களுக்கு

மட்டுமே செய்யும் தானத்தை,

தனது சொத்தில் இருந்து செய்யுங்கள்.

பொதுச் சொத்து பொதுவானது!

53

கவலைப் படுவதால்

நடந்ததை மாற்றவும் முடியாது,

நடக்கப் போவதில் இருந்து

மீளவும் முடியாது!

54

உங்கள் குழந்தைகளுக்கு

நல்ல புத்தகங்களைக் கொடுங்கள்!

பிறகு அவர்களைப் பற்றிக்

கவலைப்பட வேண்டிய அவசியம் இருக்காது!

55

அடக்குமுறையினால்

மாற்ற முடியாததைக் கூட

அன்பு மாற்றிவிடும்!

56

நான்கு நாள் பரபரப்பும்,

ஐந்தாம் நாள் செயல் மறுப்பும்,

நம்மைச் செயலற்றவராய்

மாற்றிவிடும்!

57

பணியுமிடத்து பணிந்து,

துணியுமிடத்துத் துணிவதால்;

தலை நிமிருமிடத்து

நிமிர்ந்தே நிற்பாய்!

58

ஒருவரை யாரென

தெரிந்த பிறகு மதிப்பதைவிட,

மனிதனை மனிதன்

மதிப்பதே மனிதம்!

59

பிள்ளைகளைச் சந்தேகிப்பதை விட,

காதில் விழ நம்பிக்கையை

விதைத்துக்கொண்டே இருங்கள்!

நிச்சயம் வழிதவற மாட்டார்கள்!

60

பிள்ளைகள் முன் பெற்றோர்

எப்படி என்பதில் தான்,

நாளைப் பிள்ளைகள்

எப்படி என்பது இருக்கிறது!

61

பெற்றோர் தராத அன்பைப் பிறர் தந்தால்,

எல்லாம் பெற்றவர் கைமீறிப் போய்விடும்!

62

தனக்குத் தானே

கேள்வி கேட்பவன்

தவறிப்போவதில்லை!

63

தூசுப் பொருளால்

தூசைத் துடைத்தால்,

தூசு போகாது!

64

பிரமாண்டம் உருவாவதும்,

பிச்சைக்காரன் ஆவதும்,

நாம் பேசும்

வார்த்தையில்கூட உள்ளது!

65

நீ செய்யும் அனைத்திற்கும்

நீ மட்டுமே பெருப்பு!

66

உன் தகுதியைக் கொல்லும்

முதல் எதிரி

உன் தயக்கம்!

67

இயற்கையைச் சீரழித்துவிட்டு
மனிதன் செயற்கையாய்
சிரித்துப் பார்க்கின்றான்!

68

தரையில் இருக்கிறான் என்று,
உயர் நின்று தாழ்த்திப் பேசாதே!
தவறி விழுந்தால்
முதலில் அணைப்பவன், அவனே!

69

உயரத்தில் இருக்கின்றோம்
என ஆட்டம் போடாதே!
தவறி விழுந்தால்,
தரையில் இருப்பவனை விட
பாதிப்பு அதிகம்!

70

உயர இருப்பவன்
தாழ்ந்து இருப்பவனை உயர்த்திவிட்டால்,
நாளைத் தவறி விழாமல்
தாங்கிப் பிடிப்பான்!

71

விளை நிலத்தை

விலை நிலமாக மாற்றினால்,

நாளை

எவ்வளவு விலை கொடுத்தாலும்

தீராது பசி!

72

ஏய்த்து வாங்கிய ஏணியில் ஏறியவன்,

எப்போது வேண்டுமானாலும் விழலாம்!

73

ஒவ்வொரு மனிதனும்

உன்னைப் போன்று தான்,

அவனுக்கும் உணர்வுகள் உண்டு!

74

எளியோன் முன்

உன் வலிமையைக் காட்டாதே!

நாளை நீ வலியோன் முன்

எலி போல் நிற்பாய்!

75

பழி பாவங்களுக்கு அஞ்சாதவனுக்கு

அவை மட்டுமே சொந்தமாகிவிடும்!

76

என்ன பேசுகின்றோம் என்று

தெரிந்து பேசாவிட்டால்,

பின்பு என்ன செய்வதென்றே

தெரியாமல் போய்விடும்!

77

பெற்றவர்களின் நம்பிக்கை மீது, நாட்டியம் ஆடாதே.

நாளை, உன் பிள்ளைகள் உன் தலையிலும் ஆடலாம்!

78

பிடிக்காத ஒன்றை மறுக்க வாதம் செய்யாதே,

கண்டுகொள்ளாமல் அமைதியாய் இரு!

79

பொதுநலம் என்ற விதையாய் புதைபவன்,

இறந்த பிறகும்

புகழ் என்ற விருட்சமாய் வளருவான்!

80

பிடிவாதம் பிடிப்பவனை,

பிடிவாதமே

பிறரிடம் இருந்து பிரித்துவிடும்!

81

இமையைத் திறக்க மறுத்தால்

விடியல் கிடையாது!

திறமையை வளர்க்க மறந்தால்

வாழ்க்கை கிடையாது!

82

கையை ஏந்தும் மனிதனிடம்

கையை ஓங்கிக் காட்டாதே!

கையைக் காட்டும் கடவுளிடம்

காசை அள்ளிக் கொட்டாதே!

83

பணமிருந்தும்

பாசத்திற்குப் பிச்சை எடுப்பவனே,

பணக்காரன்!

84

ஒருவன் இன்றி

இன்னொருவன் இல்லை!

தான் என்று பேச

கடவுளும் கூட இல்லை!

85

முதியோர் முன் பணிதலும்

அறிவுடையோர் முன் அறிதலுமே

நம்மை ஆளாக்கும்.

86

கண் முன் நடப்பதைக்

கண்டும் காணாமல் இருப்பவன்

மனிதனாக முடியாது

கண் திறந்திருக்கும்

கற்சிலை போன்றவன்!

87

கொடுமைகள் கண்டும் சகித்துப் போகின்றவன்,

தணித்துப் போகின்றவன் அல்ல!

தான் ஒரு அடிமை என்பதை

மறைத்துப் போகின்றவன்!

88

பொருளில் தரமின்மை!

நாம் பொருத்துப் போகிட,

காசைத் தெருவில் பொறுக்கவில்லை!

89

உன் உழைப்பினை

அடுத்தவன் சுரண்டிட,

நீ பாரமேற்றும் கழுதை இல்லை!

90

அடுத்தவர் பேச்சினில்

நம்மை நாம் தாழ்த்திட,

தரம் கெட்டுப் போகவில்லை!

91

காசு பணத்திற்கு கண்ணீர் சிந்திட,

நாம் கையொடிந்து போகவில்லை!

92

ஏய்ப்பவர் ஏய்த்திட

இறங்கிப் போவதற்கு,

நாம் ஈனப் பிறவி இல்லை!

93

அடுத்தவர் அடிக்கு

அஞ்சிக் குனிந்திட,

நாம் நோய்வாய் படவில்லை!

94

பார்ப்பவர் சிரித்திட

பாரினில் பிறந்த  நாம்,

கோமாளி மனிதர் இல்லை!

95

கேட்பவர் கேள்விக்கு பதிலாய்ப் போக,

எவரும் கொட்டித் தரவில்லை!

96

இன்னல்கள் வரும்போது

இறக்க நினைத்தால்,

நாம் பிறந்ததில் அர்த்தம் இல்லை!

97

திரியென எரிந்து

மெழுகெனக் கரைபவன்,

புதுச் சுடர் தனில் ஒளிர்வான்!

98

திறமை,

சிறு பொறிதனில் முளைத்திட்டு

இருள்தனை அழித்திடும்

கதிரவனாதல் வேண்டும்!

99

யாருக்கும் பொய்யான செய்தியைக்

கற்றுக்கொடுக்காதே!

நாளை,

அவை உன் பிள்ளைகளுக்கே கூட

கற்றுக் கொடுக்கப்படலாம்!

100

போராடி விழுந்தாலும்,

மழையாகி

தாய் மண்ணுக்கே

இரையாக வேண்டும்!

101

தீயோர்க்கு,

எதற்காகவும் வளைந்து கொடுக்காதே!

வளைவாயானால்,

வில்லாய் வளைந்து அம்பாய் பாய்ந்துவிடு!

102

சாய்ந்தாலும் ஏணிபோல்

பிறர் வாழச் சாய்தல் வேண்டும்!

103

பிரபஞ்சத்தில் நீந்தும் புழுதியே, பூமி!

பூமியில் மறைந்த மர்மமே, சாமி!

104

தாரம் மட்டும் தழுவும் தலைமையும்,

பெண்ணைத் தரம் தாழ்த்தா ஆண்மையுமே,

குடும்பத் தலைவனின் அழகு!

105

அறிவு என்ற

இருள் சூழ்ந்த உலகில்,

சூழ்நிலை என்னும் விளக்கால்,

நாம் கண்டது குறைவே!

106

வாழ்வில் பயம் இருப்பின்,

பலன் இல்லை.

பலன் வேண்டின

பயம் தேவையில்லை!

107

மதம் நம்மை

மனிதனாக்கப் பார்க்கிறது.

மனித மனம்

அதை மிருகமாக்கிப்

பார்க்கிறது.

108

புத்தராக வேண்டியதில்லை!

புத்தியுள்ள மனிதரானால்

போதும்!

109

கடவுளாக முயல்வதைவிட,

நல்ல மனிதராக வாழுங்கள்!

110

சுமையென நினைப்பவனுக்கு,

தூசும் சுமையாகும்.

தூசு என நினைப்பவனுக்கு,

இமயமும் கைவசமாகும்!

111

கூடா நட்போடு

ஒருபோதும் கூடாதே!

அது உன்னை

கண்ணிருந்தும் குருடாக்கும்,

காலிருந்தும் முடமாக்கும்!

## ஆசிரியர் குறிப்பு



கவிஞர் கா.பாலபாரதி (G.Balabarathi), தமிழ் நாட்டின் தென் பகுதியில் உள்ள, ஒரு கடற்கரை மாவட்டமான இராமநாதபுரத்தில் பிறந்தவர். இவரின் தாய் கிராமமானது, அம்மாவட்டத்தில் உள்ள, இராஜ சிங்க மங்கலம் அருகில் உள்ள நோக்கனன்கோட்டை என்ற போதும், பாரனூர் என்ற கிராமத்தில், தன் குடும்பத்தோடு வசித்து வருகிறார். திரு.க.காந்தி திருமதி.கா.மீனாள் இவர்களின் புதல்வனான இவருக்கு, கோவில் கட்டுமானம் மற்றும் சிற்பக் கலையில் நிபுணரான பாலசுப்பிரமணி என்ற மூத்த சகோதரர் ஒருவரும் இருக்கிறார். கதை, கவிதை, கட்டுரைகளை எழுதும் திறன் வாய்க்கப் பெற்ற இவர், சிறந்த மேடைப் பேச்சாளராகவும், ஓவியராகவும், சமூக

ஆர்வலராகவும் திகழ்கிறார். சமூக அக்கறை மிகுந்த இவர், தனது கவிதைகள், கட்டுரைகள் மூலம் சமூகத்தின் அவல நிலையைச் சீர் தூக்கிப் பார்ப்பதோடு அல்லாமல், பல்வேறு சமூக அமைப்புகளில் உறுப்பினராகவும் செயல்பட்டு வருகிறார்.

விவசாய குடும்பத்தைச் சேர்ந்த இவர், தனது தொடக்கப் பள்ளி வகுப்புகளை, பாரனூர் அரசுப் பள்ளியிலும்; உயர்நிலைக் கல்வியை, உப்பூர், அரசு உயர்நிலைப் பள்ளியிலும்; மேல்நிலைப் படிப்பை, ஆர்.எஸ்.மங்கலம், அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியிலும் பயின்றவர். மேலும், இளங்கலை(பி.எ) மற்றும் முதுகலை(எம்.ஏ) ஆங்கிலத்தை, காரைக்குடியில் உள்ள, அழகப்பா அரசுக் கலைக் கல்லூரியில் பயின்றவர். இளநிலை கல்வியியல்(பி.எட்) படிப்பை, காரைக்குடியில் உள்ள க்ஷ்ரி ராஜ ராஜன் கல்வியியல் கல்லூரியில் பயின்ற இவர், தற்போது ஆய்வியல் நிறைஞராக(எம்.பில்), அழகப்பா பல்கலைக்கழகத்தின், ஆங்கில மற்றும் அயல்நாட்டு மொழிகள் துறையில் பயின்று வருகிறார்.

பலதிறக் கலைஞராக விளங்கும் இவர், சுண்ணாம்புச் சிற்பம், எழுத்து, பேச்சு, ஓவியம், விவசாயம், தத்துவம், களிமண் உரு, நடிப்புத் திறன், உளவியல் போன்றவற்றில் அறிவும், இன்ன பிற செயல்களில் ஆர்வமும் கொண்டவராக விளங்குகிறார். தமிழ்நாடு கட்டற்ற

மென்பொருள் அறக்கட்டளை மற்றும் காரைக்குடி, குனு/லினக்ஸ் பயனர் குழு போன்றவற்றில் தன்னார்வராக இருப்பதோடு, தொழில்நுட்பப் பயன்பாடு மற்றும் மென்பொருள் சுதந்திரம் பற்றிய பரப்புரையை தன் நண்பர்களோடு சேர்ந்து செய்து வருகிறார்.

## எங்களைப் பற்றி - Free Tamil Ebooks

### மின்புத்தகங்களைப் படிக்க உதவும் கருவிகள்:

மின்புத்தகங்களைப் படிப்பதற்கென்றே கையிலேயே வைத்துக் கொள்ளக்கூடிய பல கருவிகள் தற்போது சந்தையில் வந்துவிட்டன. Kindle, Nook, Android Tablets போன்றவை இவற்றில் பெரும்பங்கு வகிக்கின்றன. இத்தகைய கருவிகளின் மதிப்பு தற்போது 4000 முதல் 6000 ரூபாய் வரை குறைந்துள்ளன. எனவே பெரும்பான்மையான மக்கள் தற்போது இதனை வாங்கி வருகின்றனர்.

### ஆங்கிலத்திலுள்ள மின்புத்தகங்கள்:

ஆங்கிலத்தில் லட்சக்கணக்கான மின்புத்தகங்கள் தற்போது கிடைக்கப் பெறுகின்றன. அவை PDF, EPUB, MOBI, AZW3. போன்ற வடிவங்களில் இருப்பதால், அவற்றை மேற்கூறிய கருவிகளைக் கொண்டு நாம் படித்துவிடலாம்.

### தமிழிலுள்ள மின்புத்தகங்கள்:

தமிழில் சமீபத்திய புத்தகங்களெல்லாம் நமக்கு மின்புத்தகங்களாக கிடைக்கப்பெறுவதில்லை. ProjectMadurai.com எனும் குழு தமிழில் மின்புத்தகங்களை

வெளியிடுவதற்கான ஓர் உன்னத சேவையில் ஈடுபட்டுள்ளது. இந்தக் குழு இதுவரை வழங்கியுள்ள தமிழ் மின்புத்தகங்கள் அனைத்தும் PublicDomain-ல் உள்ளன. ஆனால் இவை மிகவும் பழைய புத்தகங்கள்.

சமீபத்திய புத்தகங்கள் ஏதும் இங்கு கிடைக்கப்பெறுவதில்லை.

எனவே ஒரு தமிழ் வாசகர் மேற்கூறிய "மின்புத்தகங்களைப் படிக்க உதவும் கருவிகளை" வாங்கும்போது, அவரால் எந்த ஒரு தமிழ் புத்தகத்தையும் இலவசமாகப் பெற முடியாது.

**சமீபத்திய புத்தகங்களை தமிழில் பெறுவது எப்படி?**

சமீபகாலமாக பல்வேறு எழுத்தாளர்களும், பதிவர்களும், சமீபத்திய நிகழ்வுகளைப் பற்றிய விவரங்களைத் தமிழில் எழுதத் தொடங்கியுள்ளனர். அவை இலக்கியம், விளையாட்டு, கலாச்சாரம், உணவு, சினிமா, அரசியல், புகைப்படக்கலை, வணிகம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் போன்ற பல்வேறு தலைப்புகளின் கீழ் அமைகின்றன.

நாம் அவற்றையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து தமிழ் மின்புத்தகங்களை உருவாக்க உள்ளோம்.

அவ்வாறு உருவாக்கப்பட்ட மின்புத்தகங்கள் Creative Commons எனும் உரிமத்தின் கீழ் வெளியிடப்படும். இவ்வாறு வெளியிடுவதன் மூலம் அந்தப் புத்தகத்தை எழுதிய மூல ஆசிரியருக்கான உரிமைகள் சட்டரீதியாகப் பாதுகாக்கப்படுகின்றன. அதே நேரத்தில் அந்த மின்புத்தகங்களை யார் வேண்டுமானாலும், யாருக்கு வேண்டுமானாலும், இலவசமாக வழங்கலாம்.

எனவே தமிழ் படிக்கும் வாசகர்கள் ஆயிரக்கணக்கில் சமீபத்திய தமிழ் மின்புத்தகங்களை இலவசமாகவே பெற்றுக் கொள்ள முடியும்.

**தமிழிலிருக்கும் எந்த வலைப்பதிவிலிருந்து வேண்டுமானாலும் பதிவுகளை எடுக்கலாமா?**

கூடாது.

ஒவ்வொரு வலைப்பதிவும் அதற்கென்றே ஒருசில அனுமதிகளைப் பெற்றிருக்கும். ஒரு வலைப்பதிவின் ஆசிரியர் அவரது பதிப்புகளை “யார் வேண்டுமானாலும் பயன்படுத்தலாம்” என்று குறிப்பிட்டிருந்தால் மட்டுமே அதனை நாம் பயன்படுத்த முடியும்.

அதாவது “Creative Commons” எனும் உரிமத்தின் கீழ் வரும் பதிப்புகளை மட்டுமே நாம் பயன்படுத்த முடியும்.

அப்படி இல்லாமல் “All Rights Reserved” எனும் உரிமத்தின் கீழ் இருக்கும் பதிப்புகளை நம்மால் பயன்படுத்த முடியாது.

வேண்டுமானால் “All Rights Reserved” என்று விளங்கும் வலைப்பதிவுகளைக் கொண்டிருக்கும் ஆசிரியருக்கு அவரது பதிப்புகளை “Creative Commons” உரிமத்தின் கீழ் வெளியிடக்கோரி நாம் நமது வேண்டுகோளைத் தெரிவிக்கலாம். மேலும் அவரது படைப்புகள் அனைத்தும் அவருடைய பெயரின் கீழே தான் வெளியிடப்படும் எனும் உறுதியையும் நாம் அளிக்க வேண்டும்.

பொதுவாக புதுப்புது பதிவுகளை உருவாக்குவோருக்கு அவர்களது பதிவுகள் நிறைய வாசகர்களைச் சென்றடைய வேண்டும் என்ற எண்ணம் இருக்கும். நாம் அவர்களது படைப்புகளை எடுத்து இலவச மின்புத்தகங்களாக வழங்குவதற்கு நமக்கு

அவர்கள் அனுமதியளித்தால், உண்மையாகவே அவர்களது படைப்புகள் பெரும்பான்மையான மக்களைச் சென்றடையும்.

வாசகர்களுக்கும் நிறைய புத்தகங்கள் படிப்பதற்குக் கிடைக்கும்

வாசகர்கள் ஆசிரியர்களின் வலைப்பதிவு முகவரிகளில் கூட அவர்களுடைய படைப்புகளை தேடிக் கண்டுபிடித்து படிக்கலாம். ஆனால் நாங்கள் வாசகர்களின் சிரமத்தைக் குறைக்கும் வண்ணம் ஆசிரியர்களின் சிதறிய வலைப்பதிவுகளை ஒன்றாக இணைத்து ஒரு முழு மின்புத்தகங்களாக உருவாக்கும் வேலையைச் செய்கிறோம். மேலும் அவ்வாறு உருவாக்கப்பட்ட புத்தகங்களை "மின்புத்தகங்களைப் படிக்க உதவும் கருவிகள்"-க்கு ஏற்ற வண்ணம் வடிவமைக்கும் வேலையையும் செய்கிறோம்.

## FreeTamilEbooks.com

இந்த வலைத்தளத்தில்தான் பின்வரும் வடிவமைப்பில் மின்புத்தகங்கள் காணப்படும்.

PDF for desktop, PDF for 6" devices, EPUB, AZW3, ODT

இந்த வலைதளத்திலிருந்து யார் வேண்டுமானாலும் மின்புத்தகங்களை இலவசமாகப் பதிவிறக்கம்(download) செய்து கொள்ளலாம்.

அவ்வாறு பதிவிறக்கம்(download) செய்யப்பட்ட புத்தகங்களை யாருக்கு வேண்டுமானாலும் இலவசமாக வழங்கலாம்.

**இதில் நீங்கள் பங்களிக்க விரும்புகிறீர்களா?**

நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் தமிழில் எழுதப்பட்டிருக்கும் வலைப்பதிவுகளிலிருந்து பதிவுகளை

எடுத்து, அவற்றை LibreOffice/MS Office போன்ற wordprocessor-ல் போட்டு ஓர் எளிய மின்புத்தகமாக மாற்றி எங்களுக்கு அனுப்பவும்.

அவ்வளவுதான்!

**மேலும் சில பங்களிப்புகள் பின்வருமாறு:**

ஒருசில பதிவர்கள்/எழுத்தாளர்களுக்கு அவர்களது படைப்புகளை “Creative Commons” உரிமத்தின்கீழ் வெளியிடக்கோரி மின்னஞ்சல் அனுப்புதல்

தன்னார்வலர்களால் அனுப்பப்பட்ட மின்புத்தகங்களின் உரிமைகளையும் தரத்தையும் பரிசோதித்தல்

சோதனைகள் முடிந்து அனுமதி வழங்கப்பட்ட தரமான மின்புத்தகங்களை நமது வலைதளத்தில் பதிவேற்றம் செய்தல்

விருப்பமுள்ளவர்கள் freetamilebooksteam@gmail.com எனும் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பவும்.

**இந்தத் திட்டத்தின் மூலம் பணம் சம்பாதிப்பவர்கள் யார்?**

யாருமில்லை.

இந்த வலைத்தளம் முழுக்க முழுக்க தன்னார்வலர்களால் செயல்படுகின்ற ஒரு வலைத்தளம் ஆகும். இதன் ஒரே நோக்கம் என்னவெனில் தமிழில் நிறைய மின்புத்தகங்களை உருவாக்குவதும், அவற்றை இலவசமாக பயனர்களுக்கு வழங்குவதுமே ஆகும்.

மேலும் இவ்வாறு உருவாக்கப்பட்ட மின்புத்தகங்கள், ebook reader ஏற்றுக்கொள்ளும் வடிவமைப்பில் அமையும்.

**இத்திட்டத்தால் பதிப்புகளை எழுதிக்கொடுக்கும் ஆசிரியர்/பதிவருக்கு என்ன லாபம்?**

ஆசிரியர்/பதிவர்கள் இத்திட்டத்தின் மூலம் எந்தவிதமான தொகையும் பெறப்போவதில்லை. ஏனெனில், அவர்கள் புதிதாக இதற்கென்று எந்தஒரு பதிவையும் எழுதித்தரப்போவதில்லை.

ஏற்கனவே அவர்கள் எழுதி வெளியிட்டிருக்கும் பதிவுகளை எடுத்துத்தான் நாம் மின்புத்தகமாக வெளியிடப்போகிறோம்.

அதாவது அவரவர்களின் வலைதளத்தில் இந்தப் பதிவுகள் அனைத்தும் இலவசமாகவே கிடைக்கப்பெற்றாலும், அவற்றையெல்லாம் ஒன்றாகத் தொகுத்து ebook reader போன்ற கருவிகளில் படிக்கும் விதத்தில் மாற்றித் தரும் வேலையை இந்தத் திட்டம் செய்கிறது.

தற்போது மக்கள் பெரிய அளவில் tablets மற்றும் ebook readers போன்ற கருவிகளை நாடிச் செல்வதால் அவர்களை நெருங்குவதற்கு இது ஒரு நல்ல வாய்ப்பாக அமையும்.

**நகல் எடுப்பதை அனுமதிக்கும் வலைதளங்கள் ஏதேனும் தமிழில் உள்ளதா?**

உள்ளது.

பின்வரும் தமிழில் உள்ள வலைதளங்கள் நகல் எடுப்பதினை அனுமதிக்கின்றன.

1. www.vinavu.com
2. www.badriseshadri.in
3. http://maattru.com
4. kaniyam.com
5. blog.ravidreams.net

எவ்வாறு ஒர் எழுத்தாளரிடம் Creative Commons உரிமத்தின் கீழ் அவரது படைப்புகளை வெளியிடுமாறு கூறுவது?

இதற்கு பின்வருமாறு ஒரு மின்னஞ்சலை அனுப்ப வேண்டும்.

<துவக்கம்>

உங்களது வலைத்தளம் அருமை [வலைதளத்தின் பெயர்].

தற்போது படிப்பதற்கு உபயோகப்படும் கருவிகளாக Mobiles மற்றும் பல்வேறு கையிருப்புக் கருவிகளின் எண்ணிக்கை அதிகரித்து வந்துள்ளது.

இந்நிலையில் நாங்கள் http://www.FreeTamilEbooks.com எனும் வலைதளத்தில், பல்வேறு தமிழ் மின்புத்தகங்களை வெவ்வேறு துறைகளின் கீழ் சேகரிப்பதற்கான ஒரு புதிய திட்டத்தில் ஈடுபட்டுள்ளோம்.

இங்கு சேகரிக்கப்படும் மின்புத்தகங்கள் பல்வேறு கணிணிக் கருவிகளான Desktop,ebook readers like kindl, nook, mobiles, tablets with android, iOS போன்றவற்றில் படிக்கும் வண்ணம் அமையும். அதாவது இத்தகைய கருவிகள் support செய்யும் odt, pdf, ebub, azw போன்ற வடிவமைப்பில் புத்தகங்கள் அமையும்.

இதற்காக நாங்கள் உங்களது வலைதளத்திலிருந்து பதிவுகளை

பெற விரும்புகிறோம். இதன் மூலம் உங்களது பதிவுகள்

உலகளவில் இருக்கும் வாசகர்களின் கருவிகளை நேரடியாகச் சென்றடையும்.

எனவே உங்களது வலைதளத்திலிருந்து பதிவுகளை பிரதியெடுப்பதற்கும் அவற்றை மின்புத்தகங்களாக மாற்றுவதற்கும் உங்களது அனுமதியை வேண்டுகிறோம்.

இவ்வாறு உருவாக்கப்பட்ட மின்புத்தகங்களில் கண்டிப்பாக ஆசிரியராக உங்களின் பெயரும் மற்றும் உங்களது வலைதள முகவரியும் இடம்பெறும். மேலும் இவை "Creative Commons" உரிமத்தின் கீழ் மட்டும்தான் வெளியிடப்படும் எனும் உறுதியையும் அளிக்கிறோம்.

http://creativecommons.org/licenses/

நீங்கள் எங்களை பின்வரும் முகவரிகளில் தொடர்பு கொள்ளலாம்.

e-mail : freetamilebooksteam@gmail.com

FB : https://www.facebook.com/FreeTamilEbooks

G +: https://plus.google.com/communities/108817760492177970948

நன்றி.

</முடிவு>

மேற்கூறியவாறு ஒரு மின்னஞ்சலை உங்களுக்குத் தெரிந்த அனைத்து எழுத்தாளர்களுக்கும் அனுப்பி அவர்களிடமிருந்து அனுமதியைப் பெறுங்கள்.

முடிந்தால் அவர்களையும் “Creative Commons License”-ஐ அவர்களுடைய வலைதளத்தில் பயன்படுத்தச் சொல்லுங்கள்.

கடைசியாக அவர்கள் உங்களுக்கு அனுமதி அளித்து அனுப்பியிருக்கும் மின்னஞ்சலைfreetamilebooksteam@gmail.com எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

**ஓர் எழுத்தாளர் உங்களது உங்களது வேண்டுகோளை மறுக்கும் பட்சத்தில் என்ன செய்வது ?**

அவர்களையும் அவர்களது படைப்புகளையும் அப்படியே விட்டுவிட வேண்டும்.

ஒருசிலருக்கு அவர்களுடைய சொந்த முயற்சியில் மின்புத்தகம் தயாரிக்கும் எண்ணம்கூட இருக்கும். ஆகவே அவர்களை நாம் மீண்டும் மீண்டும் தொந்தரவு செய்யக் கூடாது.

அவர்களை அப்படியே விட்டுவிட்டு அடுத்தடுத்த எழுத்தாளர்களை நோக்கி நமது முயற்சியைத் தொடர வேண்டும்.

**மின்புத்தகங்கள் எவ்வாறு அமைய வேண்டும்?**

ஒவ்வொருவரது வலைத்தளத்திலும் குறைந்தபட்சம் நூற்றுக்கணக்கில் பதிவுகள் காணப்படும். அவை வகைப்படுத்தப்பட்டோ அல்லது வகைப்படுத்தப் படாமலோ இருக்கும்.

நாம் அவற்றையெல்லாம் ஒன்றாகத் திரட்டி ஒரு பொதுவான தலைப்பின்கீழ் வகைப்படுத்தி மின்புத்தகங்களாகத் தயாரிக்கலாம். அவ்வாறு வகைப்படுத்தப்படும்

மின்புத்தகங்களை பகுதி-I பகுதி-II என்றும் கூட தனித்தனியே பிரித்துக் கொடுக்கலாம்.

**தவிர்க்க வேண்டியவைகள் யாவை?**

இனம், பாலியல் மற்றும் வன்முறை போன்றவற்றைத் தூண்டும் வகையான பதிவுகள் தவிர்க்கப்பட வேண்டும்.

**எங்களைத் தொடர்பு கொள்வது எப்படி?**

நீங்கள் பின்வரும் முகவரிகளில் எங்களைத் தொடர்பு கொள்ளலாம்.

email : freetamilebooksteam@gmail.com

Facebook: https://www.facebook.com/FreeTamilEbooks

Google Plus: https://plus.google.com/communities/108817760492177970948

இத்திட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் யார்?

Shrinivasan tshrinivasan@gmail.com

Alagunambi Welkin alagunambiwelkin@fsftn.org

Arun arun@fsftn.org

**இரவி**

Supported by

Free Software Foundation TamilNadu, www.fsftn.org

Yavarukkum Software Foundation
http://www.yavarkkum.org/

## உங்கள் படைப்புகளை வெளியிடலாமே

உங்கள் படைப்புகளை மின்னூலாக இங்கு வெளியிடலாம்.

1. எங்கள் திட்டம் பற்றி - http://freetamilebooks.com/about-the-project/

தமிழில் காணொளி - http://www.youtube.com/watch?v=Mu_OVA4qY8I

2. படைப்புகளை யாவரும் பகிரும் உரிமை தரும் கிரியேட்டிவ் காமன்ஸ் உரிமம் பற்றி -

கிரியேட்டிவ் காமன்ஸ் உரிமை - ஒரு அறிமுகம்

http://www.kaniyam.com/introduction-to-creative-commons-licenses/

http://www.wired.co.uk/news/archive/2011-12/13/creative-commons-101

https://learn.canvas.net/courses/4/wiki/creative-commons-licenses

உங்கள் விருப்பான கிரியேட்டிவ் காமன்ஸ் உரிமத்தை இங்கே தேர்ந்தெடுக்கலாம்.

http://creativecommons.org/choose/

3. மேற்கண்டவற்றை பார்த்த / படித்த பின், உங்கள் படைப்புகளை மின்னூலாக மாற்ற

பின்வரும் தகவல்களை எங்களுக்கு அனுப்பவும்.

நூலின் பெயர்

நூல் அறிமுக உரை

நூல் ஆசிரியர் அறிமுக உரை

உங்கள் விருப்பான கிரியேட்டிவ் காமன்ஸ் உரிமம்

நூல் - text / html / LibreOffice odt/ MS office doc வடிவங்களில். அல்லது வலைப்பதிவு / இணைய தளங்களில் உள்ள கட்டுரைகளில் தொடுப்புகள் (url)

இவற்றை freetamilebooksteam@gmail.com க்கு மின்னஞ்சல் அனுப்பவும்.

விரைவில் மின்னூல் உருவாக்கி வெளியிடுவோம்.

——————————————————————————————————

நீங்களும் மின்னூல் உருவாக்கிட உதவலாம்.

மின்னூல் எப்படி உருவாக்குகிறோம்? -

தமிழில் காணொளி - https://www.youtube.com/watch?v=bXNBwGUDhRs

இதன் உரை வடிவம் ஆங்கிலத்தில் - http://bit.ly/create-ebook

எங்கள் மின்னஞ்சல் குழுவில் இணைந்து உதவலாம்.

https://groups.google.com/forum/#!forum/freetamilebooks

நன்றி !